**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ULUNDURPET.**

| | | |
|---|---|---|
| Calendar | : | STC. No. 308/2014 |
| Preliminary Register | : | |
| Session | : | |
| Deposition of Witness | : | Prosecution (P.W. 1 ) |
| Name | : | Tr. Prakash |
| Father's Name | : | Seenuvasan |
| Village | : | Thirunavalur |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 27.12.2022 |

**முதல் விசாரணை:**

1. நான் திருநாவலூரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து நிலத்துகாரர்கள் ஆவார்கள். கடந்த 23.01.2014 அன்று காலை 10.00 மணிக்கு நெல் அறுப்பதற்காக அறுவடை இயந்திரத்தை எனது நிலத்திற்கு எடுத்து சென்றபோது எதிரிகள் அவர்கள் நிலத்தில் நான் இயந்திரத்தை எடுத்து வர கூடாது என்று என்னை வழி மறித்தார்கள்.

2. நான் வேறு வழியாக இயந்திரத்தை எடுத்து சென்று மாலை 4.00 - 5.00 மணியளவில் அறுவடை செய்துவிட்டு இயந்திரத்தை எடுத்து சென்ற வழியாகவே கொண்டு வந்து விட்டு நான் எனது நிலத்திற்கு வந்துக்கொண்டிருந்த போது எனக்கும் அவர்களுக்கும் இருந்த முன் விரோத்தை மனதில் வைத்துக்கொண்டு வந்து என்னிடம் பிரச்சனை செய்தார்கள். 3. நான் கேட்டுக்கொண்டிருக்கும் போதே எதிரி கிருஷ்ணமூர்த்தி என்னை கன்னத்தில் அரைந்துவிட்டார். எதிரி சுந்தர்ராஜ் தடியால் என் உடம்பில் அடித்துவிட்டார். எதிரிகள் பூஷ்பா மற்றும் கோகுல் இருவரும் கையாலும் காலாலும் மாறி மாறி அடித்தார்கள். நான் கீழே விழுந்தபோது கோகுல் கையால் எனது வாயில் ஓங்கி குத்திவிட்டார்.

4. சத்தம் கேட்டு அந்த இடத்திற்கு வந்த எனது அண்ணன் வாசுதேவன், வேலைக்கு வந்த ஏழுமலை, ஆறுமுகம் ஆகியோர்கள் சண்டையை மறித்து என்னை வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். நான் வீட்டில் இருந்து சுமார் மாலை 6.45 மணியளவில் திருநாவலூர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தேன்.

5. புகாரை பெற்றுக்கொண்ட போலிசார் எந்த விசாரணையும் செய்யாமல் என்னை அனுப்பிவிட்டனர். நான் அங்கிருந்து நேரடியாக உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். கடந்த 27.01.2014 வரை மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன்.

6. நான் மருத்துவமயையில் இருந்த போது கூட திருநாவலூர் காவல் நிலையத்தில் இருந்து போலிசார் நான் கொடுத்த புகார் சம்மந்தமாக எந்த விசாரணையும் செய்யவில்லை. நான் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்த பிறகு உளுந்தூர்பேட்டை காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் விழுப்புரம் அவர்களுக்கும் பதிவு தபால் மூலம் எனது புகாரில் நடவடிக்கை எடுக்க வேண்டி மனு அளித்தேன்.

7. ஆனால் போலிசார் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் நீதிமன்றத்தில் தனி பிராது வழக்கு கொடுத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகார் நீதிமன்றத்தில் நான் அளித்த புகார் ஆகும். ( **தனி புகார் வா.சா. ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எனவே எதிரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/- Judicial Magistrate No. II,
Ulundurpet.